# இலங்கை துறைமுக அதிகாரசபை

## பதவி வெற்றிடங்கள்

கீழே குறிப்பிடப்படும் பதவிகளுக்கு வேண்டப்படும் தகைமைகளையுடைய நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### 01. பதவி : கப்பல் மாலுமி (சிரேஷ்ட முகாமைத்துவ மட்டம் 3)

**(அ) தகுதித்திறன்**

கப்பலொன்றின் கல அதிபராக (மட்டுப்படுத்தப்படாத) சேவையில் ஈடுபடுவதற்கு இலங்கை வர்த்தக கப்பல் பணிப்பாளர் நாயகத்தினால் அல்லது அவுஸ்திரேலிய அல்லது இந்திய அரசினால் வழங்கப்பட்ட தேர்ச்சிச் சான்றிதலொன்று பெற்றிருத்தல்.

அத்துடன்

**அனுபவம்**

வெளிநாட்டு வணிக கப்பலொன்றில் கல அதிபரொருவராக குறைந்தது ஒரு (01) வருட கடற் பயண அனுபவம் பெற்றிருத்தல்.

**(ஆ) சம்பளம்**

சம்பள வகையீடு : 3:3 (SLM3)

ஆரம்ப சம்பளம் :- ரூபா 76,875/-

வருடாந்த சம்பள ஏற்றம் :- ரூபா 1,555

கொடுப்பனவுகள் அடங்கலாக மாதாந்த மொத்த சம்பளம் சுமார் ரூபா. 150,000/= ஆகும்.

### 02. பதவி : பிரதான கடற் கல இணைப்பு அலுவலர் (மத்திய முகாமைத்துவ மட்டம் 2 )

**(அ) தகுதித்திறன்**

மொத்த நிறை 500 தொன்னுக்குக் குறையாத கரையோர கடற் பயணங்களில் ஈடுபடும் கப்பல்களில் கப்பல் ரோந்து அதிகாரியாக சேவையிலீடுபடுவதற்காக இலங்கை வணிக கப்பல் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட தேர்ச்சிச் சான்றிதழ் அல்லது அவுஸ்திரேலிய அல்லது இந்திய அரசாங்கங்களினால் வழங்கப்பட்ட அதற்கு சமனான சான்றிதலொன்று

அத்துடன்

பணிப்பாளர் (வணிகக் கப்பல்) மூலம் வழங்கப்பட்ட ரேடார் அவதானிப்பு சான்றிதழுடன் (Radar Observers Certificate) உயர் அலை வரிசை (VHF) மற்றும் வானொலி தொடர்பாடல் (RT) தொடர்பான விரிவான அறிவு மற்றும் சரளமாக ஆங்கில மொழியில் உரையாடும் ஆற்றல் இருத்தல் வேண்டும்.

**அனுபவம்**

உரிய துறையின் பதவியொன்றில் ஐந்து (05) வருட அனுபவம் பெற்றிருத்தல்.

**(ஆ) சம்பளம்**

சம்பள வகையீடு : 4:2 (MLM2)

ஆரம்ப சம்பளம் :- ரூபா 63,125/-

வருடாந்த சம்பள ஏற்றம் :- ரூபா 1,265/-

கொடுப்பனவுகள் அடங்கலாக மாதாந்த மொத்த சம்பளம் சுமார் ரூபா. 136,000/= ஆகும்.

**குறிப்பு**

சிறந்த உள, உடல் தகுதித்திறனுடன் மற்றும் சிறந்த செவிப்புலன் மற்றும் கட்புலனையுடைய நபரொருவராக இருத்தல் வேண்டும். (மருத்துவ பரிசோதனையொன்றிற்கு உட்படுதல் வேண்டும். )

**03. <u>பதவி : மேலதிக பிரதான கடற் கல இணைப்பு அலுவலர் (கனிஷ்ட முகாமைத்துவ மட்டம் )</u>**

**(அ) <u>தகுதித்திறன்</u>**

மொத்த நிறை 500 தொன்னுக்குக் குறையாத கரையோர கடற் பயணங்களில் ஈடுபடும் கப்பல் ரோந்து அதிகாரியாக சேவையிலீடுபடுவதற்கு இலங்கை வணிக கப்பல் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட தேர்ச்சிச் சான்றிதழ் அல்லது அவுஸ்திரேலிய அல்லது இந்திய அரசாங்கங்களினால் வழங்கப்பட்ட அதற்கு சமனான சான்றிதலொன்று

அத்துடன்

பணிப்பாளர் (வணிகக் கப்பல்) மூலம் வழங்கப்பட்ட ரேடார் அவதானிப்பு சான்றிதழுடன் (Radar Observers Certificate) உயர் அலை வரிசை (VHF) மற்றும் வானொலி தொடர்பாடல் (RT) தொடர்பான விரிவான அறிவு மற்றும் சரளமாக ஆங்கில் மொழியில் உரையாடும் ஆற்றல் இருத்தல் வேண்டும்.

**அனுபவம்**

உரிய துறையின் பதவியொன்றில் ஐந்து (05) வருட அனுபவம் பெற்றிருத்தல்.

**(ஆ) சம்பளம்**

சம்பள வகையீடு : 5 (JLM)

ஆரம்ப சம்பளம் :- ரூபா 60,00/-

வருடாந்த சம்பள ஏற்றம் :- ரூபா 1,150/-

கொடுப்பனவுகள் அடங்கலாக மாதாந்த மொத்த சம்பளம் சுமார் ரூபா. 133,000/= ஆகும்.

**கவனிக்க**

மேலே பதவிகள் தொடர்பில் விண்ணப்பிக்கும் சகல விண்ணப்பதாரிகளும் 45 வயதை விட குறைந்தவராக இருத்தல் வேண்டும். (இவ்வயதெல்லை அரச துறை அல்லது அரச கூட்டுத் தாபனங்களிலுள்ள விண்ணப்பதாரிகளுக்கு ஏற்புடையதல்ல. )

இலங்கைத் துறைமுக அதிகாரசபையில் ஏற்கனவே விதிக்கப்பட்ட அல்லது எதிர் காலத்தில் விதிக்கப்படக் கூடிய சகல சட்ட திட்டங்களுக்குமிணங்க நியமனம் பெறுபவர் செயற்படுதல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் இலங்கைத் துறைமுக அதிகாரசபையின் தேவைக்கேற்ப இலங்கை துறைமுக அதிகாரசபையின் எந்தவொரு பகுதியிலும் / பிரிவிலும் அல்லது நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவை புரிய கடமைப்பட்டுள்ளார்.

விண்ணப்பங்கள் வயது, கல்வி, தொழில் தகைமைகள், அனுபவம் தொடர்பான சான்றிதழ்களின் பிரதிகளுடன் பிரதான மனிதவள முகாமையாளர், இலங்கை துறைமுக அதிகாரசபை, கொச்சிக்கடை, கொழும்பு -13'' என்ற முகவரிக்கு கிடைக்கக் கூடியதாக 2023.05.15 ஆம் திகதிக்கு முன்னர் **பதிவுத் தபாலில்** அல்லது மின்னஞ்சல் மூலம் (slpahrex@slpa.lk) அனுப்புதல் வேண்டும். **விண்ணப்பங்கள் அனுப்பப்படும் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கப்படும் பதவி குறிப்பிடப்படுதல் வேண்டும்.**

**குறித்த சான்றிதழ்களின் பிரதிகள் இணைத்து அனுபப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.**

இவ்வறிவித்தல் www.slpa.lk எனும் வலைத்தளத்திலும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க சேவையில் அல்லது அரசாங்க கூட்டுதாபன சேவையில் இருப்பவர்களின் விண்ணப்பங்கள் அவர்களின் திணைக்கள/கூட்டுத்தாபன தலைவர்கள் ஊடாக சமர்பிக்கப்பட வேண்டியதுடன், மேற்குறிப்பிட்ட பதவிக்கு விண்ணப்பதாரி தெரிவுசெய்யப்பட்டால் குறித்த திணைக்களத்தின்/ கூட்டுத்தாபனத்தின் சேவையிலிருந்து விடுவிப்பதற்கு உடன்படுவதாக அதில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

**jiyth;.**